

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நடுகுத்தகை ஊராட்சியில் பூவிருந்தவல்லி வட்டாரம் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் பணிகள் சார்பில் சமுதாய வளைகாப்பு விழா நடைபெற்றது இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 100 கர்ப்பிணி பெண்களுக்கு சீர் வரிசைகள் வழங்கி வாழ்த்தி பேசினர் உடன் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, மாவட்ட அலுவலர் எஸ்.கே.லலிதா, வட்டார அலுவலர் அ.ச. சங்கீதா தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், ஒன்றிய செயலாளர்கள் டி.தேசிங்கு, ப.ச.கமலேஷ், தி.வை.ரவி, மாவட்ட நிர்வாகிகள் மா.ராஜ், எஸ்.ஜெயபாலன், பா. நரேஷ்குமார், ஜி.விமல்வர்ஷன், உஷாராணி ரவி, யமுனா ரமேஷ், மாவட்ட இளைஞரணி கே. சுரேஷ்குமார், பொறியாளர் எம்.மோகன், சி.அண்ணாகுமார், ப.கந்தன், நேமிலி சுரேஷ்குமார், கு. தமிழ்செல்வி, லட்சுமி, பி.எல்.ஆர்.யோகாதேவி, அக்னி ராஜேஷ், தெய்வசிகாமணி, இ.ஏ.சந்திரன், சாந்தகுமார், ஹரிபாபு, ரமேஷ், ராஜா அசோக்குமார், ஜி.பிரவீன்குமார், எம்.உதயா, இ.வி.பி.பிரதீப், எஸ்.சுதர்சனம், பட்டாபி கார்த்திக், பிரசன்னா, வி.மகேஷ்குமார், உள்பட பலர் உள்ளனர்.

கழகத் தலைவர் பிறந்தநாள்: எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி, தலைமையில்

# சைதை மேற்கு பகுதியில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கிறார்!

சென்னை,பிப்.27-

சென்னை தெற்கு மாவட்டம் - சைதை மேற்கு பகுதியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு மார்ச் 1, சனிக்கிழமை அன்று நண்பகல் 12 மணியளவில் சைதாப்பேட்டை ஆலந்தூர் சாலையில் உள்ள சைதை மேற்கு பகுதி கழக அலுவலகத்தில் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம். ஸ்ரீதரன், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடு.எல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஞானகிராமன், கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை மாநில துணைச் செயலாளர் எம்.எஸ்.அரிபாபு ஆகியோர் முன்னிலையில் 1000 பேருக்கு அறுசுவை உணவினை சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கவுள்ளார்.

எனவே இந்நிகழ்விற்கு வட்டக் கழக செயலாளர்கள் சை.மு.சேகர், ந.தமிழரசு, அட்கோகமலநாதன், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் சைதைசாதிக், நா.மணிகண்டன், அருசல்ராமன், கோ.பாஸ்கரன், மாவட்ட பிரதிநிதிகள் கு. புகழ்வேந்தன், டி.என்.சிவமணி, ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன். ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜி.பாபு மற்றும் சைதை மேற்கு பகுதிக்குட்பட்ட அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞரணி நிர்வாகிகள், தகவல் தொழில் நுட்ப அணியின் வட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, பூண்டி கிழக்கு ஒன்றியம், பேரிட்டிவாக்கம் ஊராட்சியை சேர்ந்த முனிதிருதினம் சுஜாதா இவர்களின் மகள் செல்வி மு.லாவண்யா அரசு பள்ளியில் பயின்று நீட் தேர்வில் தேர்ச்சி பெற்று ஒசூர் அரசு மருத்துவ கல்லூரியில் 5ஆம் ஆண்டு மருத்துவம் பயின்று வருகிறார். இவரின் கல்வி செலவிற்காக ஆண்டுதோறும் வழங்கும் ரூபாய் 25,000 காசோலையை கும்முடிப்பூண்டி சட்ட மன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன்.எம்.எல்.ஏ வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் எஸ்.ரமேஷ், மு.பாஸ்கரன், பி.அறிவழகன், நரேந்திரன், தில்லைகுமார், விஜயகுமார் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதி கே ஜி கண்டிகை ஊராட்சி பீரகுப்பம் மதுரா கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ், சந்திரன், ஆட்சித் தலைவர் மு. பிரதாப் கலந்துகொண்டு 335 பணியாளர்களுக்கு பல்வேறு அரசு துறையாக சார்பாக 27.83 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய பொறுப்பாளர் கே. ராஜேந்திரன், திருத்தணி வருவாய் கோட்டாட்சியர் தீபா, வட்டாட்சியர் மலர்விழி, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து, வார்டு எண் 48ல் ரூ.32.50லட்சம் மதிப்பீட்டில் கட்டபட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடம், வார்டு எண் 66ல் ரூ.10லட்சம் மதிப்பீட்டில் கட்டபட்ட புதிய நியாய விலை கட்டிடம் ஆகியவற்றை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ் ஆர் .ராஜா. எம்.எல்.ஏ திறந்து வைத்தார். மேலும் தாம்பரம் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வார்டு எண் 70ல் ரூ.25லட்சம் மதிப்பீட்டில் கட்டபட்ட புதிய அலுவலக கட்டிடத்தை தாம்பரம் மாநகர மேயர் க.வசந்தகுமாரி திறந்து வைத்தார்கள். உடன் துணை மேயர் கோ.காமராஜ்,5வது மண்டல குழு தலைவர் எஸ். இந்திரன்,மாடம்பாக்கம் ஆ.நடராஜன்,கி.வேலுமணி மாமன்ற உறுப்பினர்கள் ரமணிஆதிமுலம்,செ. சுரேஷ்.ஜி.சாந்தகுமார்.வி.முனுசாமி.மோகனரங்கன்.வி.கார்த்திக்.எம்.சீனிவாசகுமார்.பெருமாள் மற்றும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், கழக தோழர்கள் மற்றும் பொது மக்கள் என பலரும் பங்கேற்றனர்.

# சென்னை மேற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுக் கூட்டம்!

## நே.சிற்றரசு தலைமை! மாவட்ட அமைப்பாளர் இளம்பாரதி அறிக்கை!

சென்னை, பிப். 27-

சென்னை மேற்கு மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு நிர்வாகிகள் கூட்டம் (28.2.2025) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகமான எண். 20/ 32, காம்தார் நகர் முதல் தெரு நுங்கம்பாக்கம் எனும் முகவரியில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் ஏ.ஆர்.பி.எம் காமராஜ், தலைவர் ஜே. இருதயநாதன், துணைத் தலைவர் எம்.ஏ. ஜெஸ்டின்ராஜ் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுபோது கழகத் தலைவர் பிறந்த நாள் பொதுக்கூட்டம் குறித்து ஆலோசிக்கப்படவுள்ளதால், கூட்டத்தில் மாவட்ட ஆதி திராவிட நலக்குழு துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட ஆதிதிராவிடக் நலக்குழு அமைப்பாளர் இளம்பாரதி கேட்டுகொண்டுள்ளார்.

கழகத் தலைவர் பிறந்தநாள்: ஆலந்தூர் வடக்குப் பகுதி சார்பில்

# 72 இடங்களில் கழகக் கொடியேற்றி நல உதவிகள்!

## பகுதிச் செயலாளர் ப.குணாளன் அறிக்கை!

சென்னை, பிப்.27-

ஆலந்தூர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் ஆலந்தூர் ப.குணாளன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மார்ச் 1-ல் பிறந்தநாள் காணும் தமிழ்நாடு முதல்வர் திராவிட முன்னேற்ற கழக தலைவர் திராவிட மாடல் நாயகன் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு ஆலந்தூர் வடக்கு பகுதி திமுக சார்பில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மு.அன்பரசன் அவர்களின் ஆணைக்கேற்ப மார்ச் 1 அன்று 72 இடங்களில் கழகக் கொடி ஏற்றி சுமார் 2500 பேருக்கு காலை உணவு வழங்குதல், 500 நபர்களுக்கு நலதிட்ட உதவிகள் வழங்குதல்,இனிப்பு வழங்குதல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளது.இந்த நிகழ்வில் ஆலந்தூர் வடக்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள்,வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள்,பட்ட கழக நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முவர்கள்(BLA-2) கழகத் தோழர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

மின்வாரிய தொழிலாளர்களுக்கு வரலாறு காணாத சலுகைகள் வழங்கி வரும்

# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்த நாளையொட்டி நல உதவிகள்!

## மின்கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் அறிவிப்பு!

சென்னை,பிப்.27-

தமிழ்நாடு மின்சார வாரியத்தல் பணியாற்றும் தொழிலாளர்கள், அலுவலர்களுக்கு வரலாறு காணாத வகையில் சலுகைகள் வழங்கி வரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி தமிழ்நாடு, மின்கழக தொ.மு.ச. சார்பில் மார்ச்.1-ல் பல்வேறு கலை உதவிகள் வழங்கப்படுகிறது என்று அதன் பொதுச் செயலாளர் பா.மணிமாறன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பாக தமிழ்நாடு முழுவதும் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் விழாவையொட்டி மின்கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்க பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்கள் மற்றும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்கள் என 2 இலட்சம் நபர்களின் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்திய தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஏழை, எளியோர்களுக்கு, நலத்திட்ட உதவிகள், அறுசுவை உணவு வழங்கும்



நிகழ்ச்சி தமிழ்நாடு முழுவதும் மின்கழகத்தொமுச சார்பாக நடைபெறுகிறது.

மார்ச்-1 தொழிலாளர்கள் நலன் பாதுகாக்கும், திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அண்ணாசாலையில் உள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் அனைத்து தொழிலாளர்கள், பொறியாளர்கள் அலுவலர்களுக்கு மற்றும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வரலாறு காணாத ஊதிய உயர்வு, பணி புரிகிறவர்களுக்கும், ஓய்வூதிய தாரர்களுக்கும் பாதுகாப்பு வழங்கிய முத்தரப்பு ஒப்பந்தம், அகவிலைப்படி உயர்வு, கருணைத்தொகையுடன் போனஸ், அதிகாரிகளுக்கு பொங்கல்பரிசு, என எண்ணற்ற சலுகைகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சி மார்ச் 3ம் தேதி திங்கட்கிழமை தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மின் கழகத் தொமுச தலைமைச் சங்க அலுவலகத்தில் நடைபெறுகிறது.

தமிழ்நாடு மின்சாரவாரியத்தில் உள்ள தூய்மை பணியாளர்கள், காவல் பணியாளர்கள், சென்னை மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், பொதுமக்கள் என 300 பேர்கள் மற்றும் ரூ.1500/ மதிப்புள்ள சமையலுக்கு தேவையான தரமான அரிசி மற்றும் மளிகைப் பொருடகள் அடங்கிய தொகுப்பு பைகளில் நல உதவிகள் வழங்கப்படுகிறது. மதியம் சுமார் 500 பேர்களுக்கு சுவையான அறுசுவை உணவு வழங்கப்படுகிறது.

2021ம் ஆண்டு, மே மாதம் 7ம் நாள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பு ஏற்று கழகத்தலைவர் அன்புத்தளபதி அவர்கள், அப்போது நம்மை சூழ்ந்திருந்த கொரானா நோயின் தாக்கத்திலிருந்து நம்மை காப்பாற்றினார்கள். மகளிர்களுக்கு விடியல் பேருந்து பயணம், பள்ளி குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், “இல்லம் தேடி கல்வித் திட்டம்” , புதுமைப்பெண் திட்டம், முதல்வர் மருந்தகம், நான் முதல்வன் திட்டம், எல்லாவற்றிற்கும் மணிமகுடமா திகழும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், என பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்.

கடந்த அதிமுக ஆட்சியில், பொதுமக்கள் நலனில் சிறிதும் அக்கரையின்றி வீட்டுமனை பட்டா வழங்குவதை தவிர்த்த நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களை தமிழ்நாட்டில் 86000 ஏழை, எளிய மக்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கி, தமிழ்நாட்டு மக்களுக்கு பட்டா அளித்து மகிழ்ச்சி அடையச்செய்து, தமிழ்நாட்டு அனைத்து பிரிவு மக்களின் நலன் பாதுகாக்கும் அரசு என நிருப்பித்துள்ளார்.

வரி கொடுக்காமல், வஞ்சிக்கும் ஒன்றிய அரசின் வஞ்சக சூழ்ச்சியினை முறியடித்து அதன் சுவடே நம் மீது படாமல், நம் வாழ்வில் விடியலை ஏற்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்களின் பிறந்த நாள் சிறப்பாக கொண்டாடப்படுகிறது என்று மின்கழகத்தொமுச பொதுச்செயலாளர் பா.மணிமாறன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முதல்வர் பிறந்த நாள் – சைதை மேற்கு

# 139 அ வட்டத்தில் 16 பாகங்களிலும் கொடியேற்றி இனிப்பு வழங்கல்!

## சை.மு.சேகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு!

சென்னை, பிப். 27 -

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர். மருத்துவம் (ம) மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர். மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின் பேரில், சைதை மேற்கு பகுதி 139 அ வட்டக் கிளைக்குட்பட்ட அனைத்து நிர்வாகிகள், மற்றும் பாகப் பொறுப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 26.02.2025. புதன்கிழமை மாலை 6.30 மணியளவில், 21/23,வள்ளுவர் தெருவில் உள்ள பகுதி நெசவாளர் அணி துணை அமைப்பாளர். த.சேகர் இல்ல மாடியில், வட்ட அவைத்தலைவர் இ.வரதன் தலைமையில், டி. என்.சிவமணி, பூபதி.வெங்கடேசன் முன்னிலையில் நடைபெற்றது.

அதில் 1) 2025 பிப்ரவரிமாதம் 28ஆம் தேதி அன்று மாலை 4 மணிக்கு கொட்டிவாக்கம் ஒய்.எம்.சி.ஏ.திடலில் அனைத்து கட்சித்தலைவர்கள் பங்கேற்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாள் விழாவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொள்வது எனவும் 2)மார்ச் 1அன்று வட்டத்தில் உள்ள 16பாகங்களிலும் கழகக் கொடி ஏற்றி இனிப்பு, அன்ன தானம் வழங்குவது எனவும் தீர்மானம் நிறைவேற்றி வட்டச்செயலாளர். சை.மு. சேகர் உரையாற்றினார்.

பங்கேற்றவர்கள். என்.தீனதயாளன்,ஜிம். க.பிரபு, சார்ப். சரவணன்,பூ.பாஸ்கர், ஜி.ஏழுமலை, கொடி. சுரேஷ், யமஹா.ராஜேஷ்,கே.விஜயகுமார், வி.வாசுதேவன்,என். ரமேஷ், எஸ்.கண்ணன்,ப. எழிலரசன், ஆர்.பெருமாள், ஆர்.தாமோதரன், ப.சிவகுமார்,துளசி சந்திரசேகர், இ.வ.ரகுபதி, மு.காத்தவராயன், ஆட்டோ.சேகர்,எம்.சுந்தரேசன், த.சேகர்,வி. ஆதிகேசவன், ஜி.நாகதேவி,கே. பாரி,கே.வெங்கடேசன், வி. வெங்கடேசன், ஜோ. அந்தோணி, ஜி. தங்கராஜ், ப.தினகரன் டி.சரவணன்,கே.மணிகண்டன், என்.எஸ். கார்த்திக்,எஸ்.அருண்குமார், மூ. வினோத்கண்ணா,து. வடிவேலன், பா.மோ.கார்த்திக், கா.மூர்த்தி, மூ. கௌதம்,சேகர் நகர்.ஆர்.ஞானவேல், ப. மோகன். எஸ்.சந்தானகிருஷ்ணன், ஏ.எம். சேகர்,எஸ்.ராஜேந்திரன், இ. ஸ்ரீதர்,கொரியர்.சுரேஷ், எஸ். ராஜேஷ், எஸ்.கிருஷ்ணமூர்த்தி, க.சிவசண்முகம், ஜி. சீனிவாசன், கே.வேலாயுதம், உ. மகேஷ்,டி.எம்.தமீன் மற்றும் பலர் பங்கேற்றனர்



தமிழ்நாடு முதலமைச்சர் காணொலி காட்சி வாயிலாக திருவள்ளூர் ஒன்றியம் காக்களூர் ஊராட்சியில் முதல்வர் மருந்தகத்தினை திறந்து வைத்ததை தொடர்ந்து பூவிருந்தவல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி மருந்துகள் விற்பனையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், பொதுக்குழு உறுப்பினர் த.எத்திராஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் கே.கே. சொக்கலிங்கம் டி.கே.சீனிவாசன், எஸ்.சௌந்தரராஜன், த.சுகுமாரன், டி.கே.பூவண்ணன், இயேசு பாலன் , செந்தில், பிரபு , கோவிந்தராஜ் , சங்கர், சரண், சிவப்பிரகாஷ், சதீஷ் மருந்துகள் விற்பனையாளர் கார்த்திக் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு தமிழ்நாடு (FSO TN )சார்பில் தண்டையார்பேட்டையில் இருந்து பேரணியாக நடந்து சென்று வண்ணாரப்பேட்டை தபால் நிலையம் டி.எச்.ரோடு அருகே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திமுக மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் தலைமையில் தி.மு.க மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் மோ.ரவிக்குமார், பிரசிடென்சி.சி.சதீஷ், ந.ம.மகேஷ்குமார், நி.எழிலரசன், எஸ்.சதீஸ்வரி, SFI மாநில செயற்குழு உறுப்பினர் குணசேகரன், SFI மாவட்ட செயற்குழு ஐஸ்வர்யா, AISF மாவட்ட செயலாளர் ராமசாமி, மதிமுக மாணவரணி மாவட்ட அமைப்பாளர் வினோத், ஆகியோர் முன்னிலையில் 500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

# சென்னை மேற்கு மாவட்ட மீனவரணிக் கூட்டம்!

## நே.சிற்றரசு தலைமை! எம்.கே.ஆனந்த் வேண்டுகோள்!

சென்னை, பிப். 27-

சென்னை மேற்கு மாவட்ட மீனவரணி நிர்வாகிகள் கூட்டம் (28.2. 2025) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் மாவட்டக் கழக அலுவலகமான எண். 20/ 32, காம்தார் நகர் முதல் தெரு நுங்கம்பாக்கம் எனும் முகவரியில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் ஏ.ஆர்.பி.எம் காமராஜ், வீ.பி.பொன்னரசு, தலைவர் ஜெ.கதிரேசன், துணைத் தலைவர் தீனதயாளன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுபோது முதல்வர் அவர்களின் பிறந்த நாள் பொதுக் கூட்டம் குறித்து ஆலோசிக் கப்படவுள்ளதால் மாவட்ட மீனவரணி துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு சென்னை மேற்கு மாவட்ட மீனவரணி அமைடப்பாளர் எம்.கே.ஆனந்த் கேட்டுக்கொண்டுள்ளார்.



எழும்பூர் தொகுதி, வார்டு எண். 77 மற்றும் 78–ஐச் சேர்ந்த பகுதிகளில் மழைநீர் தேங்கா வண்ணம் வெளியேற்றுவதற்கு தட்டாங்குளம், டிமலஸ் சாலையில் ரூ.38 கோடி மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 17.02.2025 அன்று தொடங்கி வைத்தார். கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், 77–வது வார்டு யானைக் கவுனி மேம்பாலம் அருகில் அப்பணி நடைபெற்று வருவதை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



இராயபுரம் தொகுதி 53வது வார்டு போஜராஜன் நகர் சுரங்கப் பாதையை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ. நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். உடன் மண்டலம்–5 அதிகாரி ஃபரிதா பானு, மேற்கு பகுதி வட்டச் செயலாளர் இரா. பாலன் சென்னை மாநகராட்சி பிரிட்ஜஸ் இஇ கருப்புசாமி பிரிட்ஜஸ் சங்கரவேல், முருகன், எஸ்.இ.ராதாகிருஷ்ணன், பிரபுதாஸ், சிவக்குமார் அவர்கள் ஏ.இ.பிரபு மற்றும் மலர்விழி ஆகியோர் உடன் இருந்தனர்.